**எஸ்.டி.சி .எண். 2274/2023 நாள்– 09.02.2026 பக்கம் 21/2024**

**ம.சா.1.முருகேசன் த/பெ.பழனிச்சாமி**

**எதிரி ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

**1)** நான் அசார் டெக்ஸ் என்ற பெயரில் டெக்ஸ்டைல்ஸ் நடத்தி வருகிறேன். நான் நடத்தி வரும் தொழில் சம்பந்தமாக வருமான வரி செலுத்தி வருகின்றேன் என்றால் சரிதான். நான் எதிரிக்கு கடன்கொடுத்ததாக சொல்லப்படும் கடன் தொகையை எங்கள் வருமான வரியில் காட்டியுள்ளேனா என்றால் நான் தனிப்பட்ட முறையில் கொடுத்த கடன் ஆகும். அசார் டெக்ஸ் என்ற பெயரில் நடத்தி வரும் கடை 11, காமராஜர் நகர், 3 வது கிராஸ், கரூர் என்ற முகவரியில் உள்ளது. நான் தனிப்பட்ட முறையில் தான் கடன் கொடுத்தாக சொல்கிறேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை அசார் டெக்ஸ்சில் உரிமையாளர் என்ற கோதாவில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2) நான் 2.50 இலட்சம் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எந்த வருமானத்தில் இருந்து வந்தது என்றால் எனது விவசாய வருமானத்தின் மூலம் வந்தது ஆகும். ம.சா.ஆ.7 ஆவணம் எனது தகப்பனார் பெயரில் உள்ளது. ம.சா.ஆ 7 ஆவணத்தில் கண்ட பழனிச்சாமி என்பவர் தான் எனது தகப்பனார் என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.7 ஆவணத்தில் கண்ட நிலத்தில் என்ன பயிர் சாகுபடி செய்யப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.7 ஆவணத்திற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

3) எதிரி தன்னிடம் 2017 லிருந்து 2020 வரை வேலை பார்த்து வந்தார். எனக்கும், எதிரிக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல, பேச்சுவார்த்தை உள்ளது. எங்கள் கம்பெனியில் இருந்து எதிரி நின்றபிறகு அவர் எங்கு வேலைசெய்கிறார், எவ்வளவு சம்பளம் வாங்குகிறார், என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தன்னுடைய பழக்கவழக்கம் சம்பந்தமாகதான் எதிரிக்கு நான் 2.50 இலட்சத்தை கொடுத்தேன். எனது பிரமான வாக்குமூலத்திலையோ, புகார் வாக்குமூலத்திலையோ எதிரி எப்பொழுது என்னிடம் கடன் கேட்டார் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். அவர் 2021 ம் வருடம் மார்ச் 2 வாரத்தில் பணம் கேட்டார்.

4) தொழில் சம்பந்தமாக நடத்திவரும் வருமானத்தையும் விவசாயம் மூலமாக வரும் வருமானத்தையும் ஒன்றாக சேர்ப்பதில்லை என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்திலேயும், புகார் வாக்குமூலத்திலேயும் எனது அலுவலகத்தில் வந்து பணம் கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஒரே கட்டிடத்தில் மேலே வீடும், கீழே ஆபிசும் உள்ளது. நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரி எதாவது ஆவணங்கள் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். நான் கடன் கொடுத்த தேதியன்று எதிரி காசோலை கொடுத்தார். சாட்சி பின்னிட்டு அன்றைய தினம் ஆவணங்கள் கொடுக்கவில்லை என்று கூறுகிறார். எதிரி மே மாதம் முதல் வாரத்தில் காசோலையை கொடுத்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

நான் தன்னுடைய புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் மே மாதம் முதல் வாரத்தில் தான் கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ளீரா என்றால் ஆமாம். 15.04.2021ம் தேதியிட்ட காசோலையினை கொடுத்தார்.

5) காசோலையை கலக்சனுக்கு செலுத்தும் முன்பாக எதிரியை கேட்டேனா என்றால் ஒரு நாள் முன்னதாக கேட்டேன். நான் வழக்கு காசோலையை வசூலுக்கு செலுத்துவதே எதிரிக்கு தெரியாது என்றாலும், ஏனென்றால் வழக்கு காசோலையை எதிரி என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. புகார் மனுவில் எதிரியின் விலாசமாக குறிப்பிடப்பட்டுள்ள மூன்று விலாசம் எதன் அடிப்படையில் குறிப்பிட்டேன் என்றால் எதிரியிடமே போனில் கேட்டு தெரிந்து கொண்டேன். ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 ஆகிய திருப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக உறையில் எதிரியின் செல்போன் எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6) ம.சா.ஆ.6–ல் உள்ள கையொப்பம் எதிரியுனடையது அல்ல என்றாலும், அதனை எதிரி பெற்றுக் கொள்ளவில்லை என்றாலும், அதனை நானே அனுப்பி எனக்கு வேண்டிய நபர்கள் மூலம் சார்பு செய்தது போல் காட்டியுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள காசோலைக்கும், ம.சா.ஆ–6 ல் உள்ள ஆவணத்திற்கு கையொப்பம் வேறுபாடு உள்ளதா என்றால் ம.சா.ஆ– 6 ஆவணத்தை எதிரியின் மனைவி வாங்கியுள்ளார். ம.சா.ஆ– 6 ஆவணத்தை எதிரியின் மனைவி தான் வாங்கியுள்ளார் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

நான் காசோலையை மோசடியாக நிரப்பி உள்ளதால் தான் ம.சா.ஆ– 6 ஆவணத்தை எனக்கு பழக்கமானவர்களிடம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அறிவிப்பு அனுப்பி விவரம் எதிரிக்கு தெரியாது என்றாலும், அதனால் தான் அவர் பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்க வில்லை என்றாலும் சரியல்ல. உண்மையில் எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும், அப்படி நான் கடன் கொடுத்திருந்தால் என்னுடைய வருமான வரி கணக்கில் காட்டி இருப்பேன் என்றும், நான் கடன் கொடுத்தாக சொல்லப்படும் பணம் விவசாயத்தின் மூலம் கிடைத்த பணத்தில் கொடுத்தேன் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

7) நான் உண்மையாகவே சொந்த வருமானத்தில் வந்த வருமானத்தினை கொண்டு கடன் கொடுத்து இருந்தால் ம.சா.ஆ– 7 ஆவணத்தை வழக்கு தாக்கல் செய்யும் பொழுதோ, முதல் விசாரணையிலேயே கொடுத்து இருப்பேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு பொய்யான வழக்கு என்று தெரிந்துவிடும் என்பதால் தான் ம.சா.ஆ– 7 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னுடைய நண்பரின் பைனான்ஸ் நிறுவனத்திடம் தான் கடன் வாங்கினார் என்றால் சரியல்ல.

8) மேற்படி கடன் தொகைக்கு 2016 முதல் 2020 வரை மாதம் ரூ.5000/– வீதம் ரூ– 3 இலட்சம் வரை வட்டி கட்டியுள்ளார் என்றும், பின்னிட்டு கொரானா காரணமாக பணத்தை செலுத்த முடியவில்லை என்றும், அதனால் என்னை நண்பர் என் பெயரில் காசோலையினை மோசடியாக நிரப்பி எதிரி 2021ம் வருடம் மார்ச் 2 வது வாரத்தில் ரூ– 2,50,000/– கடன் வாங்கியதாகவும்,

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

அதற்கு வழக்கு காசோலை கொடுத்தாகவும், பொய்யாக கூறி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9) எதிரி எந்த காலத்திலும் என்னிடம் கடன் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி உண்மையில் கடன் வாங்கியிருந்தால் அதற்கான பதிவேடுகளை தாக்கல் செய்து இருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி சொன்ன தேதியில் காசோலையை வசூலுக்கு செலுத்துங்கள் என்று என்னிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு மட்டும் தான் பணம் கொடுத்துள்ளேன். வேறு எந்த நபருக்கும் கொடுக்கவில்லை.

10) எதிரி சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எந்த காசோலையையும் எனக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2016 முதல் 2020 காலகட்டத்தில் எதிரி எனது நண்பரிடம் பெற்ற கடனிற்கு ரூ. 5000/- செலுத்தி வந்த விவரம் எதிரியிடம் வேலை பார்க்கும் நபர்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ-1 ஆவணம் நான் மோசடியாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் மீது போடப்பட்டுள்ள வழக்கு பொய்யான வழக்கு என்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.